Cr.M.P.No.1569/2025
in CC.No.28/2023
PW2 – முகமது நவாஸ்கான்
நாள் 22.10.2025, 02.00 P.M.

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** என் மீது இந்த வழக்கிற்கு முன்பு இரண்டு, மூன்று வழக்குகள் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஒரு வழக்கு 3 வது எதிரி கபிபா கொடுத்த வழக்கு என்றால் சரிதான். மற்றோரு வழக்கு எனது தாயார் மரியம்பீவியை அடித்ததாக வழக்கு. சம்பவ நேரத்தில் புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சம்பவம் நடந்து எத்தனை மணி நேரம் கழித்து போலிசார் வந்தார்கள் என்றால் அரை மணிநேரம் கழித்து வந்தார்கள். ஆம்புலன்ஸிற்கு யார் போன் செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் ஆம்புலன்ஸ் வரும் வரை சுயநினைவு இல்லாமல் இருந்தேன்.

**2.** எனக்கு எங்கு காயம் ஏற்பட்டது என்றால் உச்சன்தலை, வலது முழங்காலுக்கு கீழ் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். வலது கையில் சீராய்ப்பு காயம் இடது காலில் வீக்ககாயம் ஏற்பட்டது. சம்பவத்தன்று இரவு 01.00 மணிக்கலு எனக்கு சுயநினைவு வந்தது. என்னை மருத்துவமனையில் சம்பவம் முடிந்து இரண்டு நாட்கள் கழித்து என்னை மட்டும் போலிசார் விசாரித்தார்கள். எனது மனைவியிடம் சம்பவ இடத்திலேயே வைத்து விசாரித்துவிட்டார்கள். எனது மனைவி கொடுத்த புகாரில் என்ன விவரம் கூறப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. நான் எவ்வளவு நாட்கள் மருத்துவமனையில் இருந்தேன் என்றால் 4 மாதங்கள் இருந்தேன். நான் முதல் விசாரணையில் கபிபா என்னை கம்பால் வலது காலில் அடித்தார் எனக்கு லேசான காயம் ஏற்பட்டது என்று நான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என்னை 1 வது எதிரி முகமதுகனி கட்டையால் அடித்ததாக தெரிந்தது அது என்ன கட்டை என்று எனக்கு தெரியவில்லை.

**3.** சம்பவ இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் எத்தனை தூரம் இருக்கும் என்றால் சுமார் 1500 மீட்டர் இருக்கும். 1 வது எதிரி சம்பவ சமயத்தில் எங்கள் ஊரில் குடியிருக்க வில்லை. 2 வது சதக் என்பவர் முதுகுளத்தூரில் குடியிருந்து தொழில் செய்து வருகிறார். 3 வது எதிரி கபிபா எங்கள் ஊரில் இருந்து வருகிறார். ரவி என்பவர் பூலாங்குளத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் நானும் எதிரிகளும் தவிர வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். எனது அம்மா மரியம்பீவி சம்பவ இடத்தில் இருந்தார்களா என்றால் இருந்தார். சம்பவம் பற்றி அவருக்கு தெரியும்.

**4.** ரவி என்பவர் என்னை இடது காலில் மிதித்தார் என்றால் சரிதான். 1வது எதிரி எத்தனை முறை என்னை அடித்தார் என்றால் 10 முறை எனது வலது முட்டியில் அடித்தார். இந்த விவரத்தை நான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் போலிசார் விசாரித்த போது கட்டையால்தான் அடித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் மருத்துவரிடம் செல்லும் போது நான் சுயநினைவுடன் இருந்தேனா என்றால் இருந்தேன். அன்று அதிகாலை 01.40 மணிக்கு மருத்துவரிடம் என்னை 4 நபர்கள் தாக்கியதாக சொன்னேன். நான் மருத்துவரிடம் 2 பெண்கள் 3 ஆண்கள் தாக்கியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் மருத்துவரிடம் எந்த ஆயுதத்தால் எந்த இடத்தில் தாக்கியதாக குறிப்பிட்டு சொன்னேனா என்றால் இல்லை.

**5.** எனக்கு சம்பவ சமயத்தில் நான் அணிந்திருந்த சட்டை முழுவதுமாக ரத்தம் படிந்திருந்தது. காவலர்கள் அந்த சட்டையை கேட்டவில்லை. எதிரிகள் கட்டையை கொண்டுவிட்டு சென்றார்கள் என்றால் சரிதான். சம்பவ நேரத்தில் 3வது எதிரி கபிபா வீட்டிற்குள்தான் இருந்தார் என்றால் சரிதான். 3வது எதிரியை சம்பவ சமயத்தில் போலிசார் கைது செய்யவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரத்தைதான் போலிசார் என்னிடம் விசாரித்தபோது சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் மருத்துவரிடம் எதிரிகள் என்னை கத்தி மற்றும் கம்பால் தாக்கியதாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

**6.** நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் மது அருந்தும் பழக்கம் எனக்கு உள்ளது என்றால் சரிதான். நான் மது அருந்திவிட்டு கீழே விழுந்த காயத்தை வைத்து எதிரிகள் மீது பொய்யாக வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது சைக்கிள் ஓட்ட தெரியும் என்றால் சரிதான். நான் மது குடித்துவிட்டு எனது மனைவியை அடித்ததாக எனது மனைவி பலமுறை காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார் என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி